செ.வெ.எண்: 34 /2019 நாள்:15.03.2019

# திருப்பூர் மாவட்டம்

## ஊடக சான்று மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி., இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக தரைதளத்தில், பாராளமன்ற தேர்தலை முன்னிட்டு ஊடக சான்று மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தினை இன்று (15.03.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி., இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

நாடாளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதையொட்டி, திருப்பூர் மாவட்டத்தில் வேட்பாளர்களின் விளம்பரங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக ஊடக சான்று மற்றும் கண்காணிப்புக்குழு மையம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஊடக சான்று மற்றும் கண்காணிப்புக்குழு மையம் 24 மணி நேரமும் செயல்படும், இதனை கண்காணிக்கப்பதற்காக சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு உள்ளுர் தொலைக்காட்சிகளில் வேட்பாளர்கள் குறித்த விளம்பரங்களை பதிவு செய்து இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படவுள்ள பொதுப் பார்வையாளர்கள் மற்றும் செலவின பார்வையாளர்களிடம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதலோடு சமர்பிக்கப்படவுள்ளது.

தேர்தல் குறித்த விவரங்களை பத்திரிக்கை செய்தியாளர்கள், தொலைக்காட்சி செய்தியாளர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தேர்தல் ஊடக மையம் (மீடியா சென்டர்) செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.ஆர்.சுகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.கீதா பிரியா, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா. ஜான் ஜெகத் பிரைட், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.ஜெயபாலன், உதவி திட்ட அலுவலர் (கணக்கு) திருமதி.ராதா, தேர்தல் வட்டாட்சியர் திரு.ச.முருகதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**